**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Folk deities in S. Ramakrishnan Novels

**Santhanalakshmi G[1]*, Dr J. Aruna[2],**
[1]Part-Time Research scholar, (Reg.No: BDU2120632779355), BDU/PhD/20/0456, Dated: 04.09.2020
Bishop Heber College (Autonomous), Affiliated to Bharathidasan University, Tiruchirappalli – 02.
ORCid: https://orcid.org/0009-0009-3112-7796
[2]Assistant professor, Department of Tamil, Bishop Heber College (Autonomous A++), Affiliated to Bharathidasan University, Trichy, Tamilnadu, India.
ORCid: https://orcid.org/0009-0000-4881-3164
*Correspondence: lakshmi2012dhivyasakthi@gmail.com.

**Article Info**
Received on 20-Feb-2026, Revised on 27-Feb-2026, Accepted on 27-Feb-2026, Published on 01-March-2026

## ABSTRACT

The proverb states, “One should not reside in a village without a temple.” People believe that if good things happen in their lives, it is due to the grace of God, and if bad things occur, they are due to the anger of God. In this way, we can understand that rural people worship folk deities with a sense of faith mixed with fear.

In the beginning, nature worship emerged due to fear of natural forces. Later, as religion developed, forms of worship evolved into the worship of major deities, while the worship of minor (folk) deities continued among rural people. Thus, religious belief developed through various stages. Folk deities are referred to as minor deities. This system includes several types, such as clan deity worship, family deity worship, and village deity worship.

This study is structured to explain the ideas related to the worship of minor deities as presented in the novels of S. Ramakrishnan.

***KEYWORDS:*** *Minor deity, Sacrifice, Worship, Malevolent deity, Ancestors, Pregnant woman, Mermaid, Ritual porridge preparation, Ritual offering, Clan deity.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher’s Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# எஸ். ராமகிருஷ்ணன் நாவல்களில் சிறுதெய்வங்கள்

[1]**சந்தானலெட்சுமி கோ,** பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
(Reg.No: BDU2120632779355), BDU/PhD/20/0456, Dated: 04.09.2020
பிஷப் ஹுபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 02
மின்னஞ்சல்: lakshmi2012dhivyasakthi@gmail.com
[2]**முனைவர் ஜா. அருணா,** நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
பிஷப் ஹுபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி – 02

**ஆய்வுச்சுருக்கம்:**

“கோவில் இல்லா ஊரில் குடியுருக்க வேண்டாம்” என்பது பழமொழி. மக்கள் நல்ல செயல்கள் தன் வாழ்வில் நடந்தால் அது தெய்வத்தின் அருள் என்றும், தீயவை நடந்தால் அது தெய்வத்தினுடைய கோபம் என்றும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இவ்வகையில் நாட்டுப்புற மக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை நம்பிக்கையுடனும் மேலும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபட்டு வந்த நிலையினை நாம் அறிய முடிகின்றது.

தொடக்கத்தில் இயற்கையின் மீது கொண்டுள்ள அச்சத்தின் காரணமாக இயற்கை வழிபாடும், பிறகு சமயம் வளர்ந்த பின்னர், பெருந்தெய்வ வழிபாட்டு நிலைகளும், நாட்டுப்புற மக்களிடையே சிறுதெய்வ வழிபாடுகளும் என்றவாறு பல நிலைகளாக இறைநம்பிக்கை வளர்ச்சி பெற்றது. நாட்டுப்புற தெய்வங்களே சிறு தெய்வங்களாக அழைக்கப்படுகின்றது. குலதெய்வ வழிபாடு, குடும்பதெய்வ வழிபாடு, ஊர்த்தெய்வ வழிபாடு என்று இதில் பல வகைகள் உண்டு. எஸ். ராமகிருஷ்ணன் அவர்களுடைய நாவல்களில் சிறுதெய்வ வழிபாடு குறித்து விளக்கியுள்ள செய்திகளை எடுத்துரைக்கும் விதமாக இவ்ஆய்வு அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** சிறுதெய்வம், பலியிடுதல், வழிபாடு, துர்தேவதை, மூதாதையர், நிறைசூலி, கடற்கன்னி, கஞ்சிகாய்ச்சுதல், படையல், குலதெய்வம்.

**முன்னுரை:**

பண்டைய தமிழர்கள் வழிபாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளனர் என்பதனை சங்கம் இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. தொடக்கத்தில் இவ்வழிபாட்டுமுறை இயற்கையின் மீது மனிதனுக்கு ஏற்பட்ட அச்சத்தின் காரணமாகவே அமைந்தது. வழிபடுவதன்மூலம் அதனால் ஏற்படும் தாக்கத்தினை குறைக்க முடியும் என நம்பினான். இவ்வழிபாடு நாளடைவில் உருவ வழிபாடாக பெருந்தெய்வம் மற்றும் சிறுதெய்வ வழிபாடாகவும் வளர்ச்சி அடைந்தது. பெரும்பாலும் நாட்டுப்புற மக்களின் வழிபாடாக இன்று சிறுதெய்வ வழிபாடு உருப்பெற்றுள்ளது. இச்சிறுதெய்வ வழிபாடுகளில் குல தெய்வங்கள், காவல் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் என்ற வகையிலும், இதற்கான விழா எடுத்தல், நேர்த்திக்கடன் செலுத்துதல், பலியிடுதல் என சிறுதெய்வங்களும்

Copyright © Author(s), Article DOI: https://doi.org/10.63300/kijts06012026 

அதற்கான வழிபாட்டு முறைகளும், இடத்திற்கேற்ப பல்வேறாகப் பெருகியுள்ளன. எஸ். ராமகிருஷ்ணன் அவர்களுடைய நாவல்களில் சிறுதெய்வங்கள் பற்றியும் அவற்றின் சடங்கு முறைகளைக் குறித்தும் எடுத்துரைக்கும் செய்திகளை விளக்கும் விதமாக இவ்ஆய்வு அமைகின்றது.

**பெண்தெய்வ வழிபாடு:**

இன்றைய சிறுதெய்வ வழிபாட்டு முறைகளில் பெண் தெய்வங்கள் முக்கிய இடங்களைப் பெறுகின்றன. இவ்வழிபாட்டுமுறை பண்டைக்காலந்தொட்டே மக்கள் வழக்கில் இருந்து வருகின்றன. ஆற்றல்மிக்க தெய்வமாகவும், தாய்போன்று சாந்தம்மிக்க தெய்வமாகவும் என இருவேறு நிலைகளில் இதன் வழிபாட்டு முறைகள் அமைகின்றன. இதனை,

“ஆற்றல்மிக்க பெண்தெய்வம் கணவன் இல்லாத பூர்வீகத்தாய், எல்லா புராணத்தொகுதிகளையும் தன் முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் என்பவை உலகந்தழுவியனவாய் இருந்துள்ளமையை இன்று ஆய்வுலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. உலகின் அனைத்துப் பகுதிகளிலும் மானிட வாழ்க்கையில் உதயகாலத்திலிருந்து ஆற்றல் மிக்க அன்னை-பெண் தெய்வம் அத்தியாவசியம் என்ற வகையில் முக்கியத்துவம் பெற்றிருந்தாள்.” ((பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப.146) என்றவாறு பெண்தெய்வ வழிபாட்டுமுறை குறித்து க. கைலாசபதி குறிப்பிடுகின்றார்.

துயில் நாவலில் இருக்கங்குடி மாரியம்மன் கோவிலில் திருவிழா பற்றி எடுத்துரைக்கப்படுகின்றது. இத்திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுவதும், மேலும் மக்கள் இத்தெய்வத்திற்கு வேண்டிக்கொண்டு முடி காணிக்கை செலுத்துவது பற்றியும், மேலும் நிமித்தம் நாவலிலும் தனது வேண்டுதலுக்கேற்ப இக்கோவிலுக்குச் சென்று மாவிளக்கு போடுதல் பற்றியும், இம்முறைகள் தங்களது வேண்டுதலை ஏற்று தெய்வம் குறையைப் போக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அமைவதனை ஆசிரியர் எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**துர்தேவதை வழிபாடு:**

பழந்தமிழர்களுடைய வாழ்வினில் பேய்கள் மற்றும் ஆவிகள் பற்றிய நம்பிக்கை நிலவி வந்துள்ளதனை இலக்கியங்கள் நமக்கு நினைவுறுத்துகின்றன. இந்நம்பிக்கையானது இன்றளவும் மக்களிடையே நிலவி வருகின்றதனை நாம் அறிய முடிகின்றது.

பேயானது நாட்டிலும், காட்டினிலும், போர்க்களத்திலும் இருக்கும் என்றும், நம்மை வறுத்தும் எனவும் நம்பினர். முன்னோர் தன்னை துன்புறுத்தக்கூடாது என்பதற்காக அதனை வழிபாடு செய்தனர். இதனை,

“நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்

Copyright © Author(s), Article DOI: https://doi.org/10.63300/kijts06012026 

அறவோர் பள்ளியு மறனோம் படையும்"

(சிலம்பு. இந்திர விழவூரெடுத்த காதை 176-180)

என்றவாறு இளங்கோவடிகளின் பாடலடிகள் மூலம் அறியலாம்.

"இங்கு மூவறு கணங்களுள் பூதமும் குறிக்கப்படுவது கொண்டு பூதமும் பழமையான தெய்வமாக இருந்திருக்க கூடும் எனக் கருதவேண்டியுள்ளது" (தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.289) மேற்குறிப்பிட்டவாறு பூதமும் தெய்வமாக வழிபட்டு வந்த நிலையினை காந்தி அவர்கள் எடுத்துரைக்கின்றார்.

இதேபோன்று கண்ணுக்குப் புலப்படாத பேய்கள் உலவுவதாக மக்கள் நம்பிய செய்தியினை புறப்பாடல் ஒன்று,

"வாயவன் காக்கையும் கூகையும் கூடிப்

பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும் காடு " (புறநானூறு – 238)

என்றவாறு எடுத்துரைப்பதன் வழி சுடுகாட்டில் பேய் இருந்ததாக மக்கள் நம்பினர் என்பது புலப்படுகின்றது.

துயில் நாவலில் பெர்காம்பூரின் முஷாபுரி என்ற கிராமத்தில் ஒரு பெண் நோய்வாய்பட்ட நிலையினை, அக்குடும்பம் அவளுக்கு துர்தேவதையால் பீடிக்கப்பட்டுள்ளாள் என நம்புகின்றனர். அதனால் அவள் கணவனுக்கு மீன்பிடி தொழிலில் வருமானம் இல்லை எனவும், உள்ளூர் பூசாரி அவளிடமிருந்து பேயை ஓட்டுவதற்கான சிகிச்சையாக ஒருவேளை ஆகாரமும், உடம்பில் துணியில்லாமலும் இருட்டு அறையில் வைக்கப்பட்டிருப்பதும், தலைமுடியில் ஒருகொத்தை துண்டித்து கோயிலின் மரத்தில் அடித்துவிட்டு, அவளுக்கு இரும்பால் சூடு போட்டும் பேயை விரட்டுவதற்காக அம்மக்கள் செய்துள்ள செயல்களை ஆசிரியர் விளக்குகின்றார்.

**கஞ்சி காய்ச்சி ஊற்றுதல்:**

மக்கள் தம்முடைய குடும்பத்தின் மூதாதையர்களான பெண்களைத் தெய்வமாக நினைத்து வழிபடுதல் மற்றும் அவர்களுக்கென்ற சில சடங்கு முறைகளையும் செய்து அவர்களை சாந்தி செய்விப்பதற்கான வழிபாட்டு முறைகளை இன்றளவும் நாட்டுப்புற மக்களிடத்துக் காணப்படுகின்றன.

இதனை துயில் நாவலில், தங்களுடைய ஊருக்குப் பிழைக்கவந்து, குடிக்க கஞ்சி கிடைக்காமல் வன்கொலை செய்யப்பட்ட இரண்டு பெண்களை சாந்தி செய்வதற்காக ஒவ்வொரு வருடமும், ஊர்த்திருவிழாவின்போது பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கஞ்சி காய்ச்சி அனைவருக்கும் ஊற்றும் சடங்குகளை மக்கள் மேற்கொள்வது பற்றி விளக்குகின்றது. இத்திருவிழாவின்போது, கேந்திப்பூக்களும் கனகாம்பர பூக்களும், வளையல்களும் வாங்கி வந்து,

பெண்கள் அனைவரும் கஞ்சி காய்ச்சி அந்த நிறைசூலியை வழிபட்டு செல்கின்ற நிலையினை இந்நாவல் விளக்கி உரைக்கின்றது.

**கடற்கன்னி வழிபாடு:**

துயில் நாவல், அறப்பள்ளி என்ற பகுதியில் வாழ்கின்ற மலைவாழ் மக்கள் கடற்கன்னி மீது கொண்டுள்ள இறை நம்பிக்கை பற்றி எடுத்துரைக்கின்றது.

இம்மலை கிராமங்களில் வாழும் மக்கள் கடற்கன்னியைக் காண்பதை அதிர்ஷ்டமாகவே கருதினார்கள். சின்னராணி என்பவள், கடற்கன்னியாக வேடமிட்டு ஷோவில் நடித்திருந்தாலும் அவளை அம்மலைமக்கள் தெய்வமாகவே வழிபட்ட நிலையினை எண்ணும்போது, கடற்கன்னியின்மீது கொண்டுள்ள இறை நம்பிக்கை நமக்குப் புலப்படுகின்றது. சின்னராணிக்கு, அம்மக்களை தான் ஏமாற்றுகிறோம் என்ற குற்ற உணர்வும், ஆனால் மலைவாசிகள் அவளை காண வரும்போது, காட்டுப்பூக்களையும் நாணல் கட்டுக்களையும் கொண்டுவந்து வழிபடுவதும், கர்பிணிப்பெண்கள் கண்டால் பிறக்கும் குழந்தையும் கடற்கன்னியாகவே பிறக்கும் எனவும், அவர்கள் கடற்பக்கம் சென்றால் அது பிடித்துக் கொன்றுவிடும் என்றும் அதனாலேயே அவர்கள் மலையைவிட்டு இறங்கினால்கூட இரவிற்குள் மறுபடியும் மலையேறிவிட வேண்டும் எனவும் தங்களுக்குள் கட்டுப்பாடு வைத்திருக்கும் நிலையினையும் இந்நாவல் நமக்கு விரிவாக எடுத்துரைக்கின்றது.

**சிறுதெய்வ வழிபாட்டு முறைகள்:**

ஆதிகாலத்திலிருந்து இன்றைய அறிவியல் காலம்வரை மக்கள் தத்தமக்குரிய தெய்வங்களை சில வழிபாட்டு முறைகளோடு சமயச் சடங்காகவே செய்து வருகின்றனர். இச்சடங்கு முறைகள் அந்தந்த மக்களின் நம்பிக்கையினைப் பொறுத்து அமைகின்றது. இந்நிலையினை,

“ஒன்றைச்செய்து மற்றொன்றைப் பெறுவது சடங்கின் நோக்கமாக இருப்பதால், நிகழ்த்துதல் என்பது இதன் அடிப்படைக் கூறாக அமைகின்றது.” (தமிழ் இலக்கிய மரபு-நாட்டுப்புற மரபு, ப.506) என்ற கூற்றின் வழி, ஒவ்வொரு சடங்கும் அமைவதனை நமக்கு எடுத்துரைக்கின்றது.

“ஒரு சில நிகழ்ச்சிகள் பரம்பரை வழக்கமாக, வழிவழி வந்து சடங்குகளாகவும் மாறிவிட்டன. முதியோர்களும் சான்றோர்களும் நடைமுறை வழக்கங்களை மக்களுக்கு அறிவித்தனர்.” (சங்கத்தமிழ் வாழ்வியல், ப.155) என்றவாறு சண்முகம்பிள்ளை எடுத்துரைக்கும் இக்கருத்து நம்பிக்கைகள் மற்றும் சடங்குகள் வளர்ந்த விதம் குறித்து விளக்குவதாக அமைகின்றது.

துயில் நாவலில் சிறுதெய்வங்களுக்கென்று சில வழிபாட்டு முறைகளை விளக்குகின்றது. சங்கரன் கோவிலுக்குச்சென்று அங்குள்ள தெய்வத்திடம் உப்பு வாங்கிப் போட்டால் தங்களுக்குரிய நோய் குணமாகும் என்பதும், அங்கு பிரசாதமாகத் தரப்படும் புற்று மண்ணை கையில் பூசிக்கொள்ள நோய் தீரும் எனவும் நம்பிக்கை கொண்டிருந்தனர். மேலும் போத்தை என்ற காட்டு தெய்வத்தினை

வணங்க, ஏலகிரி மலையில் காட்டுப்பன்றியினுடைய இரத்தத்தினைக் கொண்டு தயாரிக்கப்பட்ட தைலத்தினை வாங்கி அதனை தலையில் ஊறவிட்டு, மூன்று நாட்கள் உப்பு மற்றும் காரமில்லாத பத்தியத்தினைக் கடைபிடித்து இத்தெய்வத்தினை வணங்கி, அதற்கென்று உதிரப்பலியும் கொடுத்து வழிபாடு செய்தால், தனக்குரிய நோய் இறங்கும் என்றவாறும் மக்கள் கொண்டுள்ள வழிபாட்டு முறையினையும், அதனில் கொண்டுள்ள நம்பிக்கையினையும் ஆசிரியர் விளக்குகின்றார்.

**காவல் தெய்வ வழிபாடு:**

நாட்டுப்புற மக்களிடையே காவல்தெய்வ வழிபாடு என்பது சிறப்பு பெற்றதாக அமைகின்றது. இக்காவல் தெய்வங்கள் ஊரின் எல்லையில் அமைந்து மக்களுக்குத் துன்பம் தரக்கூடிய எந்த தீவினை சக்திகளையும் நெருங்கவிடாதபடி காக்கும் ஆற்றல் வாய்ந்த தெய்வமாக மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

சஞ்சாரம் நாவலில், மூதூரின் எல்லைச்சாமியான சூலக்கருப்பசாமி கோவிலின் சிறப்பு பற்றி எடுத்துரைக்கின்றது. மற்ற கோவில்களில் எல்லாம் கையில் அருவாளோடு கருப்பசாமி காட்சி தருவார். ஆனால் இக்கோவிலில் சூலத்தோடு காட்சி தருவது இக்கோவிலினுடைய தனிச்சிறப்பு ஆகும்.

மூதூருக்கும் பனங்குளத்துக்கும் நடுவே, விழுதுகள் விடப்பட்ட பெரிய ஆலமரத்தின் கீழ், சிறிய காட்டுக் கோவிலாக, பதினெட்டுப்படி கொண்டு வெட்டவெளியில் நடுநாயகமாக ஒரு கையில் சூலத்தினையும், மறுகையில் நாயுடனும் கருப்பசாமி நின்றுகொண்டிருக்கும் கோவிலின் அமைப்பினை மிகவும் கம்பீரமாக எடுத்துரைக்கின்றது. மேலும் இக்கோவிலில் முப்பூசை விழா நடப்பது கூடுதல் சிறப்பாக இந்நாவல் விரிவாக விளக்குகின்றது.

**வழிமறிச்சான் மேடு:**

துயில் நாவலில், இறந்தோரின் நினைவாக வழிபடக்கூடிய வழிமறிச்சான் மேடு பற்றி எடுத்துரைக்கின்றது. தாணிக்குடியில் ஒரு கர்பிணிப் பெண்ணையும், அவளது மாமியாரையும் கொலைசெய்த இடமான ஓடையானது, அதன்பிறகு தண்ணீர் வரத்து நின்றுபோய் விட்டது. எனவே ஊற்று தோண்டி அந்த ஓடைக்குள் மக்கள் நீர் எடுத்து வருகின்றனர். அதனால் உருவாகிய சிறிய மேடு ஓடைக்குள் இருக்கின்றது. இம்மணல் மேட்டினை வழிமறிச்சான் மேடு என்றும், இதனைத் தாண்டி கர்பிணிப்பெண்கள் செல்லக்கூடாது என்றும், இச்சம்பவத்திற்குப் பிறகு, ஊரே வறட்சி கொண்டுவிட்டதாகவும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையினையும் பயத்தினையும் விளக்குகின்றது.

**நள்ளான் நள்ளி கிணறு:**

அன்றைய மதராசப்பட்டிணத்தில், நள்ளான், நள்ளி என்ற ஆண் மற்றும் பெண் கிணறுகளின் வழிபடு நிலையினை நிமித்தம் நாவல் எடுத்துரைக்கின்றது. இந்த இரண்டு கிணறுகளும்

ஒன்றுக்கொன்று இணையாகவும், ஒன்று வற்றிப்போனால் மற்றொன்றும் வற்றிவிடும் எனவும் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். இக்கிணறுகளை, வெறும் கிணறுகளாக நினைக்காமல் புனிதமாகக் கருதி, வெள்ளி செவ்வாய் விளக்கேற்றி வந்தால் கிணறு வற்றாமல் தண்ணீர் கொடுக்கும் என்றவாறு அம்மக்கள் செய்த வழிபாட்டு முறையினை நிமித்தம் நாவல் எடுத்துரைக்கின்றது.

**கோமாதா வழிபாடு:**

இயற்கையினை வழிபடுகின்ற முறை, தொன்றுதொட்டு நம் சமுதாயத்தில் நிலவிவருகின்ற வழிபாட்டு முறையாகும். எனவேதான் தாவரங்களையும், விலங்குகளையுமே அருள் உணர்வோடும், அவைகள் தெய்வங்களின் வடிவங்களாகவும் கொண்டு வழிபடுகின்றனர். ஆநிரை வழிபாடு என்பது மங்கல வழிபாடாகக் கருதப்படுகின்றது. இன்றும் கிராமப்புறங்களில் கோவில் மாடுகளை வழிபடுவதினையும், தங்களது இல்லங்களில் வளர்க்கப்படும் மாடுகளுக்குப் பொங்கலிட்டு வழிபடுவதனையும் நாம் காணமுடிகின்றது.

சஞ்சாரம் நாவலில், கோவில் மாட்டினை தங்கள் குலதெய்வமாக வணங்கும் நிலையினையும், அம்மாடுகள் ஊர் ஊராகச் சென்று வருவதும், அவற்றிற்கு வேண்டிய உணவினை மக்கள் விருப்பத்தோடு கொடுப்பதும் என கோவில் மாடுகளின் வழிபாட்டு முறையினை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

**முடிவுரை:**

சிறுதெய்வங்கள் வேத கடவுளோடு பெரும்பாலும் தொடர்புகொள்ளாதவையாக இருப்பதினால் இதற்கென்று திட்டவட்டமான வரையறைகள் வழிபாட்டு முறைகளில் கிடையாது.

மக்கள் சிறுதெய்வத்தின்மீது கொண்டுள்ள அச்சத்தின் காரணமாகவும், இயற்கையினுடைய சீற்றம் குறைந்து வாழ்வில் வளம் பெறவும், சிறுதெய்வங்கள் கொண்டாடப்பட்ட நிலையினை நாம் அறிய முடிகின்றது.

நாட்டுப்புற தெய்வங்கள் மற்றும் வழிபாடுகள், மக்களுடைய வாழ்வோடு இரண்டறக்கலந்த நிலையினை இந்நாவல்கள் வழி நாம் அறியலாம்.

சில சமயங்களில், தெய்வத்தின் மீது கொண்ட அதீத நம்பிக்கையினால், வழிபாட்டு முறைகளில் சில மூடநம்பிக்கையும் கலந்துள்ள நிலையினையும் நாம் உணரமுடிகின்றது.

மேலும் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளில் ஒற்றுமைத்தன்மையும், மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடும், ஒன்றாகக் கொண்டாடுகின்ற வளமான விழாவாகவும், இவ்வளமையினைக் காக்க தெய்வ அருள்வேண்டி, ஆண் தெய்வங்கள், பெண்தெய்வங்கள் என்றவாறு அவற்றுக்கான வேண்டுதல்களை நிறைவேற்றியும், சிறுதெய்வ வழிபாட்டு முறைகள் அமைவது அதன் சிறப்பாக அமைகின்றது.

**துணை நூற்பட்டியல்:**

1. ஆய்வுக்கோவை, தமிழ் இலக்கிய மரபு - நாட்டுப்புற மரபு, தொகுதி-1, போதி வனம், சென்னை, முதற்பதிப்பு – 2023.
2. காந்தி க, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 2003.
3. கைலாசபதி க, பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1991.
4. சண்முகம் பிள்ளை மு, சங்கத்தமிழ் வாழ்வியல், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு – 1997.
5. புலியூர் கேசிகன் உரை, சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை, மறு பதிப்பு – 2009.
6. புறநானூறு மூலமும் உறையும், நியூ செஞ்ச்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு – 2004
7. ராமகிருஷ்ணன் எஸ், துயில், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2018.
8. ராமகிருஷ்ணன் எஸ், சஞ்சாரம், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, மூன்றாம்பதிப்பு – 2019.
9. ராமகிருஷ்ணன் எஸ், நிமித்தம், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2018.